**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண். 135/2016**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் நாள் செவ்வாய்கிழமை

வா.சா.3 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம், சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | M. நிலவழகன் | த/பெ.: | S. மாணிக்கவேலன் |
| கிராமம்: | எடமேலையூர் | தாலுக்கா: | நீடாமங்கலம் |
| மதம்: | இந்து | தொழில்: | வழக்கறிஞர் |
| வயது: | 54 | முகவரி: | எடமேலையூர் , |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 30.01.2024

முதல் விசாரணை :-

நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வந்துள்ளேன். நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து மன்னார்குடியில் வழக்கறிஞராக தொழில் புரிந்துவருகிறேன். நான் அசல் வழக்கு எண் 135/2016 நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டு நான் இவ்வழக்கு சொத்தை பார்வையிட்டு அதன் அடிப்படையில் ஆணையர் அறிக்கை மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். நான் தாவா சொத்தை03.12.2022 ல் பார்வையிடும்போது இவ்வழகில் மன்னார்குடி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் டவுன் சர்வேயர் ஆகியோர்களும் இருந்தார்கள். தாவா ஸ்தலத்தை டவுன் சர்வேயர் மற்றும் அவர் உதவியாக கிராம நிர்வாக அலுவலர் அளந்து காண்பித்தார்கள். நான் மேற்படி தாவா ஸ்தலத்தை அளந்ததற்கான சர்வேயர் அறிக்கை எனக்கு கொடுத்தார். நான் அதனை எனது அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அந்த அறிக்கையின் படி 143 சதுர அடி ஆக்கிரமிப்பு செய்ததாக கண்டுள்ளது. நான் ஆய்வு செய்த இடத்தின் சர்வே எண் 392 ஆகும் . அதில் தான் மேற்படி ஆக்கிரமிப்பு இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன். எனது நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆகும். மாதிரி வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகும். மன்னார்குடி நகர நிலவரித்திட்ட தனி வட்டாட்சியர் கடிதம் மற்றும் அதனுடன் இணைந்த நகரநிலவரி திட்ட சார் ஆய்வாளர் அளித்த தோராய வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆகும். நான் எனக்கு நீதிமன்றம் அளித்த உத்தரவின் பேரில் ஸ்தல ஆய்வு மேற்கொண்டு ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

Sd/– M. நிலவழகன்

Sd/– திரு. கே. சக்திவேல்,
சார்பு நீதிபதி , மன்னார்குடி.